அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
# தமிழ்மொழி

பெயர்:- ________________________________

ஆண்டு 8

150 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ பல்தேர்வு வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூட்டுக்குள் புள்ளடி இடவும்!
- ☐ பகுதி 2 இற்குரிய விடைகளை நீல அல்லது கறுப்பு நிறப் பேனாவால் எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ வினாத்தாள், விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கித் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!

## பகுதி 1

தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக!

1. தமிழிலுள்ள மிகப் பழைமையான இலக்கணநூல்
   அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) புறநானூறு
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

2. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று
   அ) நாலடியார் ஆ) குண்டலகேசி இ) திருவாசகம் ஈ) சீறாப்புராணம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

3. தீந்தமிழ் என்ற சொல்லைப் பிரித்தால்
   அ) தீ + தமிழ் ஆ) தீந் + தமிழ் இ) தீத் + தமிழ் ஈ) தீம் + தமிழ்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

4. நேர்நின்று போராடுகிற போது ஏற்படுகிற புண்
   அ) மனப்புண் ஆ) விழுப்புண் இ) உடற்புண் ஈ) கைப்புண்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

5. மழை விடாமல் பெய்ததால் வெள்ளம் வந்தது. இது
   அ) தனிவாக்கியம் ஆ) கலப்புவாக்கியம் இ) கூட்டுவாக்கியம் ஈ) தொடர்வாக்கியம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

6. தனித்து நின்று பொருள்தரும் ஆற்றல் இல்லாதது
   அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) எதிர்ச்சொல்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

7. நான்கு + நிலம் - இதன் புணர்ச்சி வடிவம்
   அ) நான்நிலம் ஆ) நாணிலம் இ) நானிலம் ஈ) நாநிலம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

8. கார்காலத்தில் கொண்டல் காற்றோடு பெருமழை பொழியும் முகில்
   அ) காலமேகம் ஆ) காழமேகம் இ) காளமேகம் ஈ) காமேகம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

9. பேச்சாலும் நடிப்பாலும் கருத்துகளைக் கூறுவது
அ) இசை ஆ) நாடகம் இ) கூத்து ஈ) இயல்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

10. 'தமிழ் உள்ளளவும் வாழ்க ஔவையே!' என்று வாழ்த்திய மன்னன்
அ) சேரன் செங்குட்டுவன் ஆ) சேரமான் இ) அதியமான் ஈ) கட்டபொம்மன்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

11. இடைச்சொல் வகைளில் தத்தம் பொருளுணர்த்தி நிற்பது
அ) உ ஆ) எ இ) ஒ ஈ) உம்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

12. செருக்கு - இச்சொல்லின் பொருள்
அ) செல்லம் ஆ) ஆணவம் இ) அழகு ஈ) அன்பு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

13. பண்டாரவன்னியன் எதிர்த்துப் போராடிய ஐரோப்பியர்
அ) ஒல்லாந்தர் ஆ) போர்த்துக்கேயர் இ) பிரெஞ்சுக்காரர் ஈ) ஆங்கிலேயர்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

14. பாய்ந்தது - இச்சொல்லில் காலங்காட்டும் இடைநிலை
அ) ய் ஆ) ந் இ) த் ஈ) து
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

15. ஒன்று போல் தோன்றும் வேறொன்று
அ) ஒப்பீடு ஆ) போலி இ) உறுதி ஈ) ஒத்திகை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

16. இலை புதிதாகத் தோன்றிய நிலை
அ) சருகு ஆ) தளிர் இ) கொழுந்து ஈ) பழுப்பு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

17. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை இயற்றியவர்
அ) தொல்காப்பியர் ஆ) திருவள்ளுவர் இ) இளங்கோவடிகள் ஈ) ஔவையார்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

18. "உன்னைப் போல் எனக்கும் வாழ்வில் உலகத்தார் உயர்வு காணார்" என்று மகாகவி உருத்திரமூர்த்தி யாருக்குக் கூறுகின்றார்?
அ) முல்லைக்கு ஆ) காட்டுமல்லிகைக்கு இ) தாமரைக்கு ஈ) மல்லிகைக்கு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

19. கோவிலின் வடக்கே குளம் இருக்கின்றது. இவ்வாக்கியத்தில் வேற்றுமை உருபு ஏற்றுள்ள பொருள்
அ) எல்லை ஆ) ஏது இ) ஒப்பு ஈ) நீங்கல்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

20. வாழையின் இளமை குட்டி போல தென்னையின் இளமை
அ) நாற்று ஆ) கன்று இ) வடலி ஈ) குட்டி
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

21. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இப் பழமொழியின் பொருள்
அ) திறமையின் உயர்வு ஆ) வறுமையிற் செம்மை
இ) அடக்கம் இன்மை ஈ) உண்மையின் உயர்வு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

22. எந்தச் சிறப்புத் தன்மை கருதித் தமிழைத் தீந்தமிழ் என்பர்?
அ) பழைமை ஆ) செம்மை இ) இளமை ஈ) இனிமை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

23. ஒரு செயலைக் கொண்டு முடியும் வாக்கியம்
அ) தனி வாக்கியம் ஆ) கூட்டு வாக்கியம் இ) கலப்பு வாக்கியம்
ஈ) ஏவல் வாக்கியம்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

24. குருவி கீச்சிடும் அதுபோல ஆந்தை
அ) பிளிறும் ஆ) குழறும் இ) அலறும் ஈ) அகவும்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

25. நிழலின் அருமை
அ) மழையிற் தெரியும் ஆ) வெயிலிற் தெரியும் இ) பகலிற் தெரியும்
ஈ) இரவில் தெரியும்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

(25 புள்ளிகள்)

## பகுதி 2

1) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் உள்ளடக்கத்தை வாழிட மொழியில் எழுதுக!

வாழ்வதற்கு ஏற்ற நல்ல சூழல் என்பது நல்ல காற்று, குடிதண்ணீர் இருப்பிடம் ஆகியவற்றோடு அமைதியும் சேர்ந்தது. ஒலி மாசு உடல் நலத்தையும் பாதிக்கும் என்பதனை உணராவிட்டால், உடல் உறுப்புகள் நிரந்தரமாக பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

ஒருவருக்கு விருப்பமான ஒலி மற்றவருக்கு விரும்பத்தகாததாக இருக்கலாம். மிதமிஞ்சிய ஒலி மனித உடலையும் உள்ளத்தையும் பாதிப்படையச் செய்கிறது. இன்றைய இளைஞர்கள் அதிக ஒலியே இன்பம் தரும் என்ற தவறான எண்ணத்தில் மின்னணு ஒலியால் கவரப்பட்டு அதில் மயங்கிக் கிடக்கின்றனர்.

ஆனால் அதிகளவு ஒலி என்பது அமைதியாகக் கொல்லும் தன்மையுடையது; என்பதனை அவர்கள் உணரவில்லை என்பதுதான் வேதனைக்குரியது. செவியால் 120 டெசிபலுக்கு மேலான அதிர்வுகளைக் கேட்க முடியாது. அளவு அதிகரித்தால் செவி பாதிக்கப்படும்.

(10 புள்ளிகள்)

2) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

காடுகள் அழிக்கப்படுவதால் இயற்கையாகவே வெப்பநிலைகள் மாறுகின்றன. மலைப் பகுதியில் ஏற்படுங் காட்டுத் தீயால் பல அரிய வகை தாவரங்களும் பூச் செடிகளும் பல கோடிக்கணக்கான விலையுள்ள மரங்களும் அழிவதுடன் நுண்ணுயிர்களும் பூச்சிகளும் பல விலங்குகளும் அழிகின்றன.

காடுகள், மழை புயல் போன்றவற்றால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்து மண் வளத்தைப் பாதுகாக்கின்றன. மழை நீர் பூமிக்கு அடியில் சென்று நீரூற்றுகளில் தொடர்ந்து நீர் கிடைக்க காடுகள் வழி ஏற்படுத்துகின்றன. காடுகள் மழை அளவு அதிகரிக்கவும், காலமாறுதல்களுக்கும் முக்கிய பங்காற்றுகின்றன; காற்று மண்டலத்தில் ஈரப்பதத்தின் அளவு அதிகரிக்க உதவுகின்றன. காற்று மண்டலத்தில் உள்ள ஈரப்பதத்தில் மாசடைந்த காற்றினை உள்வாங்கி அதைச் சுத்தப்படுத்துகின்றது.

காடுகளின் அழிவு மனிதனின் வாழ்க்கைத் தரம், நாட்டின் பொருளாதாரம், எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றிற்கு தவிர்க்க முடியாத அச்சுறுத்தலாக உள்ளது. இன்றைய நிலையில் இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் 1.5 பில்லியன் டன் மரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். இந்த அளவு தற்போது நான்கு பில்லியன் டன்களை எட்டிவிடும் என்று கூறப்படுகின்றது. இந்நிலை நீடித்தால் வெப்பக் காடுகள் முழுமையாக அழிந்துவிடும் அபாயம் உள்ளது.

தளபாடப் பொருட்களுக்காகவும், விறகுகளுக்காகவும் மரங்கள் பயன்படுத்தப்படுவதால் காடுகள் அழிகின்றன. இயற்கையாகவும் மனிதர்களாலும் உருவாக்கப்படும் காட்டுத் தீ போன்றவற்றால் பல ஆண்டுகள் வளர்ந்து செழித்திருந்த மரங்கள் அழிகின்றன. காடுகள் அழிவதால், கோடைகாலம் அதிக வெப்பமாகவும், குளிர்காலம் அதிக குளிராகவும் மழை அளவு குறைந்தும் காலநிலை மாற்றங்கள் ஏற்படக் காரணமாகின்றன. நீரைத் தேக்கிவைக்கும் திறன் குறைவதால், மழைக் காலங்களில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஏராளமான பொருள் மற்றும் உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன.

1. மண் வளத்தைக் காடுகள் எவ்வாறு பேணுகின்றன?

________________________________________

________________________________________

2. காடுகளால் காற்று மண்டலம் எவ்வாறு சுத்தமாகின்றது?

________________________________________

________________________________________

3. காடுகளின் அழிவு மனிதனுக்கு எப்படியான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன?

________________________________________

________________________________________

4. மனிதன் என்ன தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றான்?

________________________________________

________________________________________

5. காடுகள் அழிக்கப்படுவதால் காலநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

________________________________________

________________________________________

(15 புள்ளிகள்)

3) பின்வரும் பாடலைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக!

வீதியிலே விளையாடும் குழந்தைச்செல்வம்
விதியறியா; நெறியறியா; குறுக்கும் நீட்டும்
பாதிவழி யடைத்தபடி ஓடி யாடும்;
பார்த்தவர்கள் எச்சரித்துத் திருத்த வேண்டும்!
ஆதிமுதல் சாலைவிதி குழந்தை உள்ளம்
அறியும்படி பதியவைத்தால், நாளை வாழ்வோர்
நீதிகளைச் சாகாமல் பாதுகாப்பார்;
நீள்விபத்து வாராமல் தடுத்தே யாள்வார்!

சாலை – வீதி

1. வீதியிலே விளையாடும் குழந்தை எதை அறிந்திருக்காது?

______________________________________________

______________________________________________

2. குழந்தை எப்படி ஓடியாடும்?

______________________________________________

______________________________________________

3. குழந்தையின் உள்ளத்தில் எதைப் பதியவைக்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

4. எதிர்காலத்தில் குழந்தைகள் எவற்றைப் பாதுகாப்பர்?

_______________________________________________

_______________________________________________

5. வீதி விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றி உங்களது கருத்து யாது?

_______________________________________________

_______________________________________________

(10 புள்ளிகள்)

4) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில மொழியிலுள்ள பந்தியை தமிழில் மாற்றி எழுதுக!

Kannan could not concentrate on his studies. He felt sad. His mother tried to encourage him. But it was no use. One day kannan saw a holy man. The holy man smiled at him. Kannan approached the holy man and asked. „Swami, I cannot concentrate on my studies. What shall I do?“ The holy man asked him a few questions. After listening to him, he finally gave his reply: „My child, it is not a bad thing to play. But there must be a time for play and a time for work. When you play, don‘t think of work; when you work, don‘t think of play. Concentrate on one thing at a time. You will achieve success.

Concentrate - கவனம் செலுத்தல்
Approached - அணுகுதல் அல்லது நாடுதல்
holy man - சாமியார்

(10 புள்ளிகள்)

5) படத்தைப் பார்க்கும் போது உமக்குத் தோன்றுவதை 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக!

(15 புள்ளிகள்)



6) கீழேயுள்ள விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக!

அ) நீங்கள் கண்ட வீதி விபத்து.

ஆ) இன்றைய இளைஞர்களுக்கு கைத்தொலைபேசி இல்லையென்றால் வாழ்க்கை இல்லை என்றாகிவிட்டது. இது பற்றிய உமது கருத்து.

இ) வேற்று மொழிச் சூழலில் வாழும் குழந்தைகள் தாய்மொழியைக் கற்பதன் அவசியம்.

(15 புள்ளிகள்)